இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 81 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 14 – சனிக்கிழமை 31 அக்டோபர் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 81 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 14 - Saturday 31 October 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

இன்று தி.மு.க. மகளிர் அணி ஆர்ப்பாட்டம்!

முதலமைச்சரையும் தூங்கி வழியும் ஆட்சியையும் எழுப்ப முயற்சிப்போம்!

ஆளத் தெரியாத த.வெ.க. அரசுக்குப் பாடம் புகட்டுவோம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் – காணொலியில் உரை!

சென்னை, அக். 31 -

சட்டம் - ஒழுங்குச் சீர்கேடு பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை - விலை வாசி உயர்வைக் கண்டித்து இன்று, தமிழ் நாடெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் கழக மகளிரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை காணொலியில் உரை யாற்றினார்.

அவ்வுரையில் கழகத் தலைவர் அவர்கள், "இன்று தி.மு.க. மகளிர் அணி நடத்தவுள்ள ஆர்ப்பாட்டம், தறிகெட்டு ஓடும் த.வெ.க. அரசுக்கான Wake-Up Call!" என்று குறிப்பிட்டார். மேலும் தமது உரையில் கழகத் தலைவர் அவர்கள், "முதலமைச்சரையும் தூங்கி வழியும் ஆட்சி நிர்வாகத்தையும் எழுப்ப முயற்சிப்போம்! ஆளத் தெரியாத அரசுக்குப் பாடம் புகட்டு வோம்!" என்று அன்பழைப்பு விடுத்துள்ளார்.

கழகத் தலைவர் அவர்கள் வீடியோவில் ஆற்றியுள்ள உரை வருமாறு:-

வணக்கம்!

எல்லாரும் நன்றாக இருக்கிறீர்களா என்று கேட்டுவிட்டுத் தான் நான் பேசுவேன். இப்போது தமிழ்நாடு இருக்கும் நிலையைப் பார்த்து நான் இப்படிக் கேட்டேன் என்றால், "என்ன கிண்டல் செய்கிறீர்களா?" என்று நீங்களே என்னைத் திருப்பிக் கேட்பீர்கள்.

தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்குச் சீர்கேடு, பெண்கள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பில் லாத நிலை, வரலாறு காணாத விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து, இன்று (அக்டோபர் 31ஆம் தேதி சனிக்கிழமை) தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டத் தலைநகரங்களில், தி.மு.க. மகளிரணி சார் பில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது! அதை முன்னிட்டுச் சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவே இந்த வீடியோ!

சில இலட்சம் பேர் செய்த தவறு!

சினிமாவில் கதாநாயகனாக இருந்தவர் நிஜத்திலும் அப்படித்தான் இருப்பார் என்று நினைத்து, சில லட்சம் பேர் செய்த தவறு, ஒட்டுமொத்த மக்களையும் இப்போது பாதித்துக் கொண்டிருக்கிறது.

த.வெ.க. ஆட்சி அமைவதற்கு முன்னால், அக்கட்சியின் தலைவரும் இன்றைய முத லமைச்சருமான விஜய் அவர்கள் அனைத் துக் கூட்டங்களிலும் என்ன பேசினார்? "தமிழ்நாட்டின் சட்டம் – ஒழுங்கு சரியில்லை; குழந்தைகள் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை; போதைப்பொருட்களால் குற்றங் கள் நடக்கின்றன!" இதை மட்டும்தான் தொடர்ந்து பேசி ஆட்சிக்கு வந்தார்.

தொடர்ந்து காணாமல் போகும் சிறுமிகள்!

கத்தி கத்தி பஞ்ச் டயலாக் பேசியவரின் ஆட்சியில்

இன்றைக்கு என்ன நிலைமை?

பட்டப்பகலில் முக்கியச் சாலைகளில் கொடூரக் கொலைகள், பாலியல் வன்கொடு மைகள், வீட்டில் தனியாக வசிக்கும் முதிய வர்களைக் கொலை செய்து நகைகளைக் கொள்ளையடிப்பது என எல்லாமே சர்வ



சாதாரணமாக நடக்கிறது. சிறுமிகள் தொடர்ந்து காணாமல் போகிறார்கள்.

குற்றவாளிகளுக்கு கொஞ்சம்கூட இந்த அரசின் மீது பயமில்லை. கிரிமி னல்கள் இதை அவர்களுக்கான ஆட்சி யாகக் கொண்டாடுகிறார்கள். தலைநக ரான சென்னையிலேயே மயிலாப்பூர், அடையாறு, தரமணி போன்ற மிக மிக முக்கியப் பகுதிகளிலேயே கொலைகள் நடக்கின்றன. ஜாமீனில் வெளியே வரும் குற்றவாளிகள், காவல் நிலையத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு வரும் வழியிலேயே அரிவாளால் ஓட ஓட விரட் டிக் கொலை செய்யப்படுகிறார்கள். நீதி மன்ற வளாகத்தின் எதிரிலேயே வெட்டிக் கொலை செய்யப்படுகிறார்கள்.

எதுவுமே நடக்காதது போன்ற – முதல்வரின் செயல்பாடுகள்!

பல மாவட்டங்களில் இரட்டைக் கொலைகள் நடக்கின்றன. கொலை செய்துவிட்டு இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்! புழல் சிறைச்சாலையில் இருந்தே கைதிகள் தப் பிச் செல்கிறார்கள். தேனி மாவட்டச் சிறைச்சாலையில் இருந்து ஒரே இரவில் 17 பேர் மெயின் கேட்டைத் திறந்து சாவகாசமாகத் தப்பித்திருக்கிறார்கள்.

நடுரோட்டில் கொலை செய்துவிட்டு, எந்தப் பதற்றமும் இல்லாமல் பைக் மற்றும் ஆட்டோக்களில் ஏறி குற்றவாளி கள் செல்கிறார்கள்.

இந்தக் காட்சிகளையெல்லாம் முதல மைச்சர் பார்க்கிறாரா இல்லையா என்றுகூட நமக்குத் தெரியவில்லை. இந்தச் செய்திகள் அவர் காதுக்குப் போகிறதா என்றே சந்தேக மாக இருக்கிறது. ஏனென்றால், தமிழ்நாட் டில் இப்படி எதுவுமே நடக்காதது போலத்தான் அவருடைய செயல்பாடுகள் இருக்கின்றன.

யாராலும் அணுக முடியாத நிலையில் முதலமைச்சர்!

எல்லாக் கட்சிகளும் அறிக்கை விடுகிறார் கள்; கண்டனம் தெரிவிக்கிறார்கள்; போராட் டம் நடத்துகிறார்கள். ஆனால், முதலமைச் சரிடம் இருந்து எந்தவிதப் பதிலுமில்லை. இன்னும் சினிமா படப்பிடிப்புக் காலத்தில் கேரவனுக்குள் சென்று மணிக்கணக்கில் உட்கார்ந்துகொள்வது போல, யாராலும் அணுக முடியாத நிலையில் அவர் இருக்கிறார்.

காவல்துறைக்கு முதலமைச்சர்தானே பொறுப்பு? அவர் பதில் சொல்ல வேண்டுமா இல்லையா? அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி உரிய உத்தரவுகளைப் பிறப் பிக்க வேண்டுமா இல்லையா? ஆனால், இது எதுவுமே நடப்பதில்லை. எல்லாத் துறை களுக்கும் ஒரு சில அமைச்சர்கள்தான் பதில் சொல்கிறார்கள். அந்தப் பதிலும் பொறுப்பற்ற பதில்களாக இருக்கின்றன.

த.வெ.க.விடமிருந்து பெண்களைக் காப்பாற்ற வேண்டிய நிலை!

ஆட்சிக்கு வந்து 6 மாதங்கள் ஆகப் போகும் நிலையிலும், எல்லாவற்றிற்கும் "தி.மு.க., தி.மு.க." என்று சொல்வதுதான் இவர்களிடம் இருக்கும் ஒரே பதில். இதில் மிகவும் கவலைக்குரிய விஷயம் என்ன வென்றால், பாதிக்குப் பாதி குற்றச் சம்பவங் களில் த.வெ.க. கட்சிக்காரர்கள்தான் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

சட்டம் – ஒழுங்கை நிலைநாட்ட முதல மைச்சர் எங்கும் செல்ல வேண்டியதில்லை; தன்னுடைய கட்சியில் இருப்பவர்களைக் கட்டுப்படுத்தினாலே குற்றங்கள் பெருமள வில் குறையும். அதாவது, பெண்களை த.வெ.க. காப்பாற்ற வேண்டியதில்லை; த.வெ.க.விடம் இருந்துதான் பெண்களைக் காப்பாற்ற வேண்டிய நிலை இருக்கிறது!

பொதுவாக, எல்லாக் கட்சியிலும் ஒரு சில

> **"சட்டம் - ஒழுங்கை நிலைநாட்ட முதலமைச்சர் எங்கும் செல்ல வேண்டியதில்லை; தன்னுடைய கட்சியில் இருப்பவர் களைக் கட்டுப்படுத்தினாலே குற்றங்கள் பெருமளவில் குறையும். அதாவது, பெண்களை த.வெ.க. காப்பாற்ற வேண்டியதில்லை; த.வெ.க.விடம் இருந்துதான் பெண்களைக் காப்பாற்ற வேண்டிய நிலை இருக்கிறது! பொதுவாக, எல்லாக் கட்சியிலும் ஒரு சில களைகள் இருக்கலாம். ஆனால், களைகள் எல்லாம் ஒட்டுமொத்த மாகப் போய் சேர்ந்திருக்கின்ற கட்சியாக இந்தத் த.வெ.க. இருக்கிறது!"**

களைகள் இருக்கலாம். ஆனால், களைகள் எல்லாம் ஒட்டுமொத்தமாகப் போய் சேர்ந்தி ருக்கின்ற கட்சியாக இந்தத் த.வெ.க. இருக்கிறது!

அதிலும், 'மெத் பூபாலன்' என்பவர் சில நாட்களுக்கு முன்னால் ஒன்றிய அரசின் D.R.I. அமைப்பிடம் மாட்டியிருக்கிறார். தமிழ்நாட்டைப் போதை உற்பத்தி மைய மாக மாற்றி, உலகம் முழுவதும் 'மெத்' சப்ளை செய்வதுதான் இவருடைய வேலை. இவர் ஒரு த.வெ.க. நிர்வாகி! ஆனால், "இந்தச் செய்தியை வெளியிட்டால் கொன்றுவிடுவோம்" என்று, த.வெ.க. ஒன் றியச் செயலாளர் பத்திரிகையாளர்களைத் தொலைபேசி யில் அழைத்து மிரட்டுகிறார். இதுதான் தூய சக்தியா?

த.வெ.க. நிர்வாகியான மெத் பூபாலன் போதைப்பொருள் உற்பத்தி மூலமாகச் சம் பாதித்த பணம்தானே, நாகை மாவட்டத்தி லும் பிற மாவட்டங்களிலும் த.வெ.க.வின் தேர்தல் செலவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டி ருக்கும்? அதனால்தான் பத்திரிகையாளர் களை மிரட்டுகிறார்களா? இதையெல்லாம் முறையாக விசாரிக்க வேண்டாமா?

அரிசியே வாங்க முடியாமல் ஏங்கும் மக்கள்!

சட்டம் – ஒழுங்குச் சீர்கேடு மட்டுமில்லா மல், வரலாற்றில் இல்லாத அளவுக்கு விலை வாசியும் உயர்ந்து மக்கள் கஷ்டப்படுகிறார் கள். ரேஷன் கடையில் சன்ன ரக அரிசி போடுகிறோம் என்று சொல்லி, ரேஷன் அரிசிக்குப் பாலிஷ் போட்டு ஏமாற்றுகிறார் கள். 'நியாயவிலைக் கடையில் மலிவு விலை வெங்காய விற்பனை' என்று ஏமாற் றுகிறார்கள்; ஆனால், கடைக்குச் சென்றால் அங்கு வெங்காயமே இருப்பு இருப்ப தில்லை. மக்களின் அன்றாட வாழ்க்கையே இந்த விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டி ருக்கிறது. தங்கம் வாங்க முடியுமா என்று ஏழை மக்கள் ஏங்கிய காலம் போய், அரிசியே வாங்க முடியுமா என்று ஏங்கு கிறார்கள்!

தமிழ்நாட்டில் – ஒரு மூடர் கூட்டத்தின் ஆட்சி!

தி.மு.க. ஆட்சியில் இந்தியாவிலேயே பணவீக்கம் குறைவாக இருக்கும் மாநிலமா கத் தமிழ்நாட்டை வைத்திருந்தோம். ஆனால், இப்போது இருக்கும் ஆட்சியாளர் களுக்கு எந்தத் துறையிலும் நிர்வாகத் திறன் இல்லை. நிர்வாகம் என்றால் என்ன வென்றே தெரியாத ஒரு மூடர் கூட்டத்தின் ஆட்சிதான் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது.

இந்தத் த.வெ.க. அரசு, சொந்தப் புத்தியும் இல்லாத, சொல் புத்தியும் இல்லாத 'சோப்ளாங்கி' அரசு! இந்தியாவிலேயே எந்த மாநிலமும் வாங்காத அதிக விலையாக 37 ரூபாய்க்கு மின்சாரம் வாங்குகிறார்கள்! காரணம், எந்தவிதத் திட்டமிடலும் தொலை நோக்கும் இல்லை!

இப்போது அதிலிருந்து திசைதிருப்புவதற் காக என்ன செய்கிறார்கள்? 41 ரூபாய்க்கு மின்சாரம் வாங்கப் போவதாகச் செய்தியை வெளியிட்டு, 'UTurn' அடித்துவிட்டார்கள். ஒரு கோட்டின் பக்கத்தில் அதைவிடப் பெரிதாக இன்னொன்றைப் போட்டால், தானாகவே அந்தக் கோடு சின்னக் கோடாக ஆகிவிடும். அதுபோல, 37 ரூபாயை குறைவாகக் காண்பிக்க வேண்டும் என்று, அந்த 41



ரூபாய் நாடகத்தை அரங்கேற்றியிருக் கிறார்கள்.

மக்களைப் பாதிக்கின்ற இந்தப் பிரச்சினை களையெல்லாம் நாம் பேசினால், ஒரு நல்ல அரசு அதைச் சரிசெய்யப் பார்க்க வேண் டும். ஆனால், இவர்கள் என்ன செய்கிறார் கள் தெரியுமா? இவர்களுடைய 'ஐ.டி. விங் 'இல் இருக்கும் 'Online Abuser' கூட்டத்தை வைத்துத் 'டூல்கிட்' ஆக்டிவேஷன் செய்கிறார் கள்! எந்தக் கட்சி மக்கள் பிரச்சினையைப் பேசினாலும், அந்தப் பதிவுகளுக்குக் கீழே அவர்களைத் திட்டி 'Comments' போட வைத் தாலே போதும் என்று இருக்கிறார்கள்.

இரண்டே இரண்டு பேருக்கு நடுவில் தான் போட்டி என்று முதலமைச்சர் சொல் கிறாரே! உண்மையில் எந்த இரண்டிற்கு இடையில் போட்டி இருக்கிறது?

- **மின்வெட்டு - அரிவாள் வெட்டு!**
- **கரண்ட் பில் - மளிகை பில்!**
- **விலை உயர்வு - கொலை உயர்வு!**

இதுதான் தமிழ்நாட்டின் யதார்த்தம்!

"அண்ணனாக இருப்பேன், மாமாவாக இருப்பேன், சித்தப்பா, பெரியப்பாவாக இருப்பேன்" என்று வசனம் பேசினாரே! முத லில் அவர் முதலமைச்சராக இருக்கட்டும்! அவர் வேலையை ஒழுங்காகப் பார்த்தால், தமிழ்நாடு எப்படி அனைத்துத் துறைகளிலும் 'ரிவர்ஸ் கியரில்' செல்லும்?

எல்லாவற்றிலும் சரிவு – வீழ்ச்சி – பின்னடைவு!

ஏதாவது ஒரு துறையிலாவது கடந்த திரா விட மாடல் ஆட்சியை விடத் த.வெ.க. ஆட்சி சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறதா? எல்லாவற் றிலும் சரிவு, வீழ்ச்சி, பின்னடைவு! இப்படி நான் சொல்லிக்கொண்டே போகலாம்.

இதை எதிர்த்துதான் 31ஆம் தேதி (இன்று) தி.மு.க. நடத்துகிற ஆர்ப்பாட்டம் என்பது, இந்த அரசுக்கான எச்சரிக்கை மணி! இதை 'WakeUp Call' எடுத்துக்கொண்டு முதல மைச்சர் செயல்பட வேண்டும்!

மக்களுக்காகத்தான் நாம் இருக்கிறோம். மக்களும் நம்மை நம்பித்தான் இருக்கிறார் கள். அதனால்தான் இந்த ஆர்ப்பாட்டம். ஆளத் தெரியாத அரசுக்குப் பாடம் புகட்டு வோம். முதலமைச்சரையும், தூங்கி வழிகிற ஆட்சி நிர்வாகத்தையும் எழுப்புகிற அளவுக்கு, இன்று (31ஆம் தேதி) நமது கண்டன ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துகள்!

'இவ்வாறு அக்காணொலியில் கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றியுள்ளார்.